**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.73/2023**

**13.02.2026. அ.சா.4 ராஜமாணிக்கம் த/பெ. பெரியபையன்**
Accused absent. Petition U/s. 317 Crpc filed and allowed.
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எங்கள் ஊருக்கும் சேத்துப்பட்டிற்கும் சுமார் 3 கி.மீ இருக்கும். நான் விவசாயம் செய்கிறேன். சம்பவம் நடந்த கடையின் பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. இறந்துபோன ராஜகோபால் கடையில் பாத்திரங்களை வாங்குவதன் மூலம் அவரிடம் எனக்கு 10 வருடம் பழக்கம். ராஜகோபால் கடை வடக்கு பார்த்த கடை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் கடைக்கு சென்றபோது என்னைத்தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் 4-5 நபர்கள் இருந்தார்கள். சம்பவத்தன்று இறந்த ராஜகோபாலின் மகனும் மருமகளும் கடையில் இருந்தார்கள். எதிரி மூர்த்தி ராஜகோபாலை தாக்கியபோது நான் தடுக்கவில்லை. ராஜகோபாலை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது நான் உடன் செல்லவில்லை. என்னை போலிசார் என் வீட்டில் ஒரு முறையும் சேத்துப்பட்டில் ஒரு முறையும் விசாரித்தார்கள். ராஜகோபாலின் கடையில் எந்த சண்டையும் நடக்கவில்லை என்றும் நான் போலிசார்கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சிசொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.